Registered as a Newspaper

★ கட்டடப் பொருட்கள்
★ கம்பி வகைகள்
★ கம்பி வலைகள்
மொத்த மாகவும் சில்லறை யாகவும் பெற்றுக் கொள்வதற்கு எம்மை நாடுங்கள்!
றஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
(மருதடி விநாயகர் ஆலய அண்மையில்)
ரதான வீதி,
மானிப்பாய்.

# உதயன்

விலை ரூ2/50

மானிப்பாயில்
ஓடுகள், பெயின்ற் வகைகள், சீமெந்து, தகரம், வாளிகள், பட்டம், கேடர்கள், ஜி. ஐ. பைப் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்.
றஞ்சன்ஸ் ஹாட்வெயர்ஸ்
(மருதடி விநாயகர் ஆலய அண்மையில்)
பிரதான வீதி,
மானிப்பாய்.

சுடர்: 4 சுக்கில ஞூ ஆடி மீ 05 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 16 (20 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 193

# கதிர்காமத்தில் குண்டு வெடிப்பு! 13 பேர் மரணம்!!

## துணை அமைச்சர் தர்மதாசபண்டா உட்பட 83 பேர் படுகாயம்!!!

கொழும்பு, ஜூலை 20

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பெரஹெரா பவனியின் போது கூடியிருந்த மக்கள் கூட்டத்தின்மீது இனந்தெரியாதோர் கிரனேட் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். துணை அமைச்சர் திரு. தர்மதாச பண்டா உட்பட 83 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோரில் 15 பேரின் நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருடாந்த ரந்தோலி பெரஹெரா பவனி நடந்துகொண்டிருந்தபோது இந்த கிரனேட் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றது.

பந்தாயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட பவனிக்கு கதிர்காமம் பத்தினி தேவாலயத்தின் பஸநாயக்க நிலமேயும் புனர் வாழ்வுத்துறை துணை அமைச்சருமான தர்மதாச பண்டா தலைமை வகித்தார்.

பவனியின்மீது இனந்தெரியாதோர் இரண்டு கிரனேட்டுகளை அடுத்தடுத்து வீசியதாகக் கூறப்படுகிறது.

கிரனேட் வெடிப்பை அடுத்து கூடியிருந்த மக்கள் சிதறி ஓடினர். இந்த நெரிசலில் மேலும் பலர் காயமடைந்தனர்.

கிரனேட் வெடிப்பில் காயமடைந்த துணை அமைச்சர் திரு. தர்மதாசபண்டா உடனடியாக விமான மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (உ-எ)

### உள்ளே மாதிரிப் படிவம் விவரத்துடன்

கடந்த 14ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயிலுநர் ஆசிரியர் (மாவட்ட உதவி ஆசிரியர்) சம்பந்தமான விவரங்கள் மாதிரிப் படிவத்துடன் முழுமையாக மூன்றும் பக்கத்தில் பிரசுரமாகி உள்ளன.

### முச்சந்தி முரளி



உப்படியே சாமான்களின்ரை விலையள் கூடிக் கொண்டே போனல் சனத்தின்ரை பாடு கஷ்டந்தான் பாருங்கோ...!

## வ. பி. போ. சபையின் வெளியூர் பஸ் சேவைகள் இன்று முதல் ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம். ஜூலை 20

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வெளியூர் பஸ் சேவைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

கோண்டாவில் சாலை திருகோணமலைக்கான பஸ்சேவையையும், காரைநகர்ச்சாலை கொழும்புக்கான பஸ் சேவையையும் இன்று ஆரம்பிக்கின்றன.

தொடர்ந்து படிப்படியாக அனைத்து பஸ் சேவைகளும் சகல சாலைகளில் இருந்தும் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் இருந்து பஸ் ஒன்று நேற்று மாலை யாழ் வந்து சேர்ந்ததை அடுத்து மட்டக்களப்பிற்கான சேவையும் இன்று ஆரம்பமாக உள்ளது. (ஓ-10-9)

## நியமனமான 268 ஆசிரியர்கள்: கல்வித் திணைக்களத்துக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு நியமனம் பெற்றுள்ள 268 ஆசிரியர்களையும் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து கடந்த 10 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்துக்கு 268 ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் பற்றிய விவரங்களை திரட்டுவதற்காக - இவர்களை யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வருமாறு யாழ். கல்வித் திணைக்களம் கோரியுள்ளது. (உ-3)

## மாவின் விலை 60 சதம் உயர்வு

கோதுமை மாவின் விலை ஒரு கிலோவுக்கு அறுபது சதம் உயர்த்தப்பட்டுள்ளது.

உணவுத் திணைக்கள பணிப்பாளர் இது சம்பந்தமான அறிவித்தலை யாழ் உணவுத் திணைக்களத்துக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

இதுவரை ஒரு கிலோ மா ஏழு ரூபா தொண்ணூறு சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த 17 ஆம் திகதி முதல் கிலோ எட்டு ரூபா ஐம்பது சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

யாழ் உணவுத் திணைக்களம் இவ்விலையேற்றம் சம்பந்தமாக சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் அறிவித்திருக்கிறது. (உ-3)

### சுபநேரம்

20—07—1989

ஆடி 06 — வியாழக்கிழமை
நக்ஷத்திரம்: திருவோணம் சுபநேரம்:
07.31 முதல் 09.01 வரை ராகுகாலம்:
01.31 முதல் 03.01 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## மீண்டும் நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீளக்குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவுகளை மீண்டும் வழங்க மக்கள் வங்கி முடிவு செய்திருக்கிறது.

மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை அடுத்தவாரம் முதல் வாரவேலைநாட்களில் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கும். (உ-10)

## தொலைபேசி சீர்குலைவு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் - கொழும்பு தொலைபேசிச் சேவை சீர்குலைந்துள்ளது.

மின்சாரத் தடையினால் பரிவர்த்தனை நிலையங்களில் உள்ள பட்டரிகள் செயலிழந்துவிட்டதன் காரணமாகவே தொலைபேசிச் சேவைகள் சீர்குலைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## இந்தியாவில் 1,000 பேருக்கு எயிட்ஸ்

புதுடில்லி, ஜூலை 20

இவ்வாண்டு நடுப்பகுதியில் இந்தியாவில் எய்ட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி விடும் என்று அறிவிக்கப்படுகிறது.

1992 ஆம் ஆண்டளவில் ஆசிய நாடுகளில் எயிட்ஸ் நோயாளரின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத தாண்டிவிடும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ)

## மாதகலில் ஆசிரியை சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் ஜூலை 20

மாதகல் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆசிரியை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் ராணி அந்தோனிப்பிள்ளை (வயது-57) எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் நடைபெற்றன. (உ-10)

## இளாலியில் ஷெல் வீச்சு

பச்சிலைப்பள்ளி ஜூலை 20

இளாலி பகுதியில் நேற்று முன்தினம் ஷெல் வீச்சு இடம்பெற்றது: இதனால் அண்டிய கிராம மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (ஒ-117)

## பல்கலைக்கழக மாணவி கைது

யாழ்ப்பாணம் ஜூலை 20

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவி ஒருவரும் அவரது தாயாரும் நேற்று முன்தினம் இரவு (செவ்வாய்) நல்லூர், பண்டாரிக்குளத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைதான மாணவியின் பெயர் இராஜாம்பிகை நடராஜா ஆகும். (ஓ)

## மட்டுவிலில் தேடுதல்

சாவகச்சேரி ஜூலை 20

மட்டுவில்பகுதி கடந்தசெவ்வாயன்று சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது. காலை 10 மணியளவில் சிவன் கோவில் பக்கமாக வேட்டுச் சத்தங்கள் கேட்டன;

இதேவேளை சாவகச்சேரியில் ஷெல் சத்தங்களும் கேட்டன. (ஓ-31)

## செய்திச் சாரம்

### பார்சல்கள் கவனம்!

கொழும்பு, ஜூலை 20

சந்தேகத்துக்கிடமான முறையில் பொதுஇடங்களில் நடமாடுபவர்கள், பொது இடங்களில் காணப்படும் பார்சல்கள் குறித்து பொதுமக்களை அரசு நேற்று எச்சரித்தது.

இது குறித்து அருகில் உள்ள இராணுவ முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலையங்களுக்கு தகவல் கொடுக்கும்படி அரசு பொதுமக்களைக் கேட்டுள்ளது. (உ-எ)

### ராஜீவ் தமிழகம் வருவார்

புதுடில்லி, ஜூலை 20

ஆகஸ்ட் முதல் வாரத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

இத் தகவலை தென் சென்னைத் தொகுதி எம். பி. திருமதி வைஜயந்திமாலா பாலி (இந்திரா காங்கிரஸ்) சென்னையில் வெளியிட்டார். (உ-எ)

### சீனி விலை அதிகரிப்பு

கொழும்பு. ஜூலை 20

ஒரு கிலோ சீனியின் விலை 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக கூ. மொ. வி. தலைவர் தெரிவித்தார்.

சீனியின் விலை உலக சந்தையில் அதிகரித்திருப்பதே இதற்குக் காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மாவிட்டபுரத்தில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது:

சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஓ-9)

### தாமதமாக வந்த வாகனங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வவுனியாவிலிருந்து நேற்று வந்த வாகனங்கள் பலமணி நேரம் தாமதத்தின்பின்னரே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

ஏராளமான வாகனங்களில் அமைதிப் படையின் அணி ஒன்று வவுனியாவை நோக்கிச் சென்றதாலேயே போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

### உமையாள்புரத்தில் இரு சடலங்கள்

வட்டக்கச்சி. ஜூலை 20

ஆனையிறவு. உமையாள்புரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் கிடக்கக் காணப்பட்டன.

சடலங்கள் பின்னர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு அங்கு அடையாளம் காணப்பட்டன.

கொலையுண்டவர்கள் உமையாள்புரத்தைச் சேர்ந்த மாரிமுத்து மகேந்திரன் (வயது 22) அன்னலிங்கம் அறிவழகன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டனர். (ஓ-163)

# ரஞ்சன் புதுடில்லி செல்வார்?

கொழும்பு, ஜூலை 20

இந்திய அமைதிப்படை வாபஸ் பெறச் செய்வது குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின புதுடில்லி செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் தலைநகர் பக்தாதில் தற்போது தங்கியுள்ள அவர் தாயகம் திரும்பும் வழியில் புதுடில்லி வரக் கூடும் என அங்கு எதிர்பார்க்கப்பட்டது.

ஈராக்கின் ஜூலை 17 புரட்சியின் 21ஆவது வருட நிறைவுக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கைஅரசின் சார்பில் வெளியுறவு அமைச்சர் விஜேரத்தின சென்றிருக்கிறார்.

நாளை (வெள்ளிக்கிழமை) திரு. விஜேரத்தின கொழும்பு திரும்புவதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. விஜேரதின புதுடில்லி செல்லக்கூடும் என்ற செய்தியை கொழும்பு வட்டாரங்கள் உறுதி செய்யாவிட்டாலும் அதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதை அவை மறுக்கவில்லை என்று பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தூதரும் புதுடில்லியில்!

புதுடில்லி, ஜூலை 20

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா தற்போது புதுடில்லியில் தங்கி இருக்கிறார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்த திரு. மெஹ்ரோத்திரா யாழ்ப்பாணத்தில் இருந்தே வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. நட்வர்சிங்குடன் புதுடில்லி சென்றார்.

திரு. மெஹ்ரோத்திரா நேற்றிரவு பிரதமர் ராஜீவ் காந்தியை சந்தித்துப் பேசினார். (உ-எ)

## அமைதிப்படை விலகல் விவகாரம்: கடற் கண்காணிப்பை இந்தியா தீவிரப்படுத்தியது

புதுடில்லி, ஜூலை 20

அரபிக் கடலில் தனது கண்காணிப்பை இந்தியா தீவிரப்படுத்தியுள்ளது.

புதிய ரக விமானங்களையும் கப்பல்களையும் பயன்படுத்தி தீவிர ரோந்தில் இந்தியக் கடற்படை ஈடுபட்டிருப்பதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமைதிப்படையை வெளியேறும்படி இலங்கை கோரியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ)

## கொழும்பில் கண்ணிவெடி! 4 விமானப்படையினர் பலி!!

கொழும்பு, ஜூலை 20

கொழும்பில் கண்ணி வெடி ஒன்று வெடித்ததில் நான்கு விமானப் படை வீரர்கள் உயிரிழந்தனர்;

கதிர்காமம் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று, சுமார் ஒரு மணித்தியாலம் கழித்து கொழும்பில் இக் கண்ணிவெடித்தது. (உ-3)

## உமாவின் பூதவுடல் நேற்று வவுனியாவில்

கொழும்பு, ஜூலை 20

கடந்த ஞாயிறு கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் திரு. உமா மகேஸ்வரனின் சடலம் நேற்று வவுனியாவுக்கு அருகில் கோயில் புதுக்குளம் என்னும் இடத்துக்கு கொண்டு வரப்பட்டதாக இந்திய வானொலி அறி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த இருவரின் சடலங்கள் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

திருநெல்வேலியைச்சேர்ந்த எம். நித்தியானந்தன் (வயது 21) என்பவரது சடலமும்—மல்லாகத்தைச் சேர்ந்த நாகரத்தினம் விக்னேஸ்வரன் (வயது 21) என்பவரது சடலமுமே ஒப்படைக்கப்பட்டவை ஆகும்.

இரு சடலங்களும் விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன; (ஓ-10-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

J. V. C. G X N70 வீடியோ கமரா National Portable N V – 180 டெக் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் எவர்விஷன் 21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [C/ 3065]

நல்ல நிலையிலுள்ள டைப் ரைட்டர் ஏசியா ஈரோ இங் லயன் சைக்கிள்கள் உடனடி விற்பனைக்கு உண்டு. செல்லக் கண்டு 27/14 துரையப்பா ஒழுங்கை, ஈச்சமோட்டை ரேட், கண்டுக்குளி. [1099]

### காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்தியில் பருத் தித்துறை வீதியில் கடை, வீடு கட்ட உகந்த 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. கருணானந்தன் முருகன் இல்லம, பழைய வீதி, கோப்பாய். [சி/3060]

### பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இரண்டு மாதம் நிறை வடைந்த சுத்த இன பொமே ரியன் நாய்க்குட்டிகள் விற் பனைக்குண்டு. தொடர்பு: து. வைத்தீஸ்வரன் - மானிப் பாய் ஆண்கள் பாடசாலைக்கு முன். [1100]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

சீக்கிரத்தில் வளர்ச்சியடை யும் (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (50 க்கு மேல் எடுப்ப வர்களுக்கு விலை ரூ. 3/50) 20 ஆம், 21 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும், இல. 9 சந்தையா லேன். சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்). குறிப்பு: குஞ்சு களுக்கு இரவில் லைட் அவசி யம் இல்லை. (1301)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு, பிற வுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

### தேவை

நல்ல நிலையில் உள்ள வேலை செய்யக்கூடிய டி பி றி சர் தேவை. அளவு விலை விபரங் களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க பூராசா, கடை வீதி, யோகபுரம். [1302]

நல்லநிலையில் உள்ள லாம் பெண்ணையில் இயங்கும் சிக்மா றெபின் சென்ரிச்ஸ் வாட்ட பம் தேவை. தொடர்பு தி. இராசரெத்தினம், தாவடி தெற்கு, கொக்குவில். (11566)

நல்ல தையல் தைத்து அனுபவம் உள்ள இளம் பெண் கள் வேலைக்கு தேவை ABAR-NAA TAILORING SHOP கைலாசபிள்ளையார் கோவிலடி சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குதொடர்பு கொள்ள வும். (11535)

### மணப்பெண்கள் தேவை

யாழ், வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள அரசாங்க உத்தி யோகத்தருக்கும் குற்றமற்ற 27 வயது சிவில் எஞ்சினியருக் கும் 31 வயது R. C எக்கவுண் டனுக்கும் கனடாவில் வேலை செய்யும் 33 வயதானவருக்குக் கனடாவிலுள்ள கத்தோலிக்க பெண்ணும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (11574)

### சேவை

நெல் குற்றுதல், மா, மிள காய் அரைத்தல், தானிய வகைகள் உடைத்தல் மின்சா ரம் தடைப்பட்டாலும் செய்து கொடுக்கப்படும். K. S. R. K Grinding Mill 3 ஆம் கட்டையடி, கல்வியங் காடு. (11567)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கண்டாவளை திரு. பொன்னையா திலகவதி
அவர்களின் அன்புமகன்

### செல்வன் வசந்தகுமார்

(சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

தாயின் மடியில்: 13 – 03 – 1968
தரணியைவிட்டு: 20 - 06 - 1989

ஆருயிர் நண்பா! அன்பு வசந்தகுமார்!
''நீரின்றி அமையா துலகு'' அதுபோல்
நீர் இன்றி வாழும் நெறியறியாத் துயர்நிலை—
பேரன்ப உனக்கிப் பெருமுடிவு ஏன்தானோ?
உன்பிரிவால் – உகுத்த கண்ணீர் அருவியொடு—
என் இதயம் – நின்றநிலைக் காளே ஆனேன்...
வாழ்வு வசந்தமாய் வண்ணநிலாக் காற்றோட—
தாழ்வு ஏதுமில்லாத் தாய்தந்தை மகனாய்...
காலன் உன் அருகுவரக்...காவலனாய் நானில்லை—
கோலமது கொடுமை – குமுறுகின்றேன் நின்பிரிவால்–
ஆண்டுபல சென்றாலும்... நட்பு மறவாதுன்
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்
உன்பிரிவுத் துயரால் துடிக்கும்
இணைபிரியா நண்பன்
செ. சிவராசா (சிறீ)

மார்க்கட்,
கொடிகாமம்.

(11573)

---

## 67 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்: 08-08-1968

ஆண்டவன் அடியில்: 17-05-1989

### செல்வன் கிருஷ்ணபிள்ளை சிவானந்தன்

(யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி உயர்தரமாணவன்)

அன்பான மகனே! அருமைச் சகோதரனே! ஆசை மருமகனே! இனிய நண்பனே ஆனந்தா! எம் உயிர் இருக்கும்வரை உன் நினைவிருக்கும். குழந்தை உள்ள மும், திறந்த மனமும், குவிந்த உன் புன்சிரிப்பும் எங்கே? பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியும் நேரத் திலா கவர்ந்தான் காலன்.

எமது மகனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக் கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். 21 - 07 - 89 அன்று அதிகாலையில் கீரி மலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 22 - 07 - 89 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த் திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாசிவன்
நீர்வேலி, வடக்கு.

இங்ஙனம்
அன்பான ஐயா, அம்மா,
மாமன்மார், சகோதர சகோதரிகள்.

(1223)

---

கோரதீவுத்துறையில்

## மண்மூடைகளுக்குமேல் கிடக்கும் இரும்புப்பாதை

யாழ்ப்பாணம். ஜுலை 20 கனரக வாகனங்களை ஏற்றி இறக்கக் கூடிய இரும்புப் பாதை சேவையில் ஈடுபடுத் தப்படாமல் மண்மூடைக ளுக்குமேல் இருப்பதால் கோர தீவுத்துறையில் இடவசதி யின்மை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மழையினால் நனைந்து உக்கிப் போயிருக்கும் மண் மூடைகள் சரிந்து விழுந்து பெரும் நஷ்டங்களை ஏற்படுத்தும் ஆபத்து இருக் கின்றது. (க)

---

## ★ கம்பியூட்டர் பயிற்சி ★

### Data Processing and Computer Programming in Basic

வல்வை நெடியகாட்டில், மகளிர் பாடசாலைக்கு அண்மையில் ஆரம்பமாகியுள்ள மேற்படி பயிற்சி வகுப்புக்கு, தவிர்க்க முடியாத சூழ்நிலையினால் கடந்த வாரம் வரமுடியாத வல்வை, தொண்டமா னாறு, உடுப்பிட்டி, பருத்தித்துறை, பொலிகண்டி வாழ் இளைஞர், யுவதிகளும் மற்றும் வெளிநாடு செல்லக் காத்திருக்கும் இருபாலாரும் எதிர் வரும் சனி, ஞாயிறு காலை 10.00 மணிக்கு நடைபெறும் வகுப்புகளில் கலந்து கொள்ளலாம். புதிதாக சேர் பவர்களும் சேர்ந்து கொள்ளலாம்.

— மகா

[1221]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 31- 10- 1910

மறைவு: 20- 06- 1989

அமரர்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (திருநா)

(Retired State Officer)

பேரான தெய்வம் எங்கள் தந்தை
தீராத துயர் தந்து இறைவனடி சேர்ந்தார்
ஆறாது ஆறாது எங்கள் துயர்!
சிவனே யவரை நின்பாதம் கூட்டு.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்கின் போது நேரில் கலந்துகொண்டும் அனுதாபச் செய்தி கள் அனுப்பியும் நேரில் கலந்து கொள்ள முடியாது பின்பு வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், பல வகை யிலும் உதவிகளும் அளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

'திருவதிகை'
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

(1227)

---

## முதலாம் வருட நினைவஞ்சலி



மண்ணில்: 12- 07- 1941

மறுவாழ்வில்: 20- 07- 1988

### திருமதி மேரி பிலோமினா செபஸ்ரியாம்பிள்ளை

(இராணி)

வருடம் ஒன்று மறைந்தாலும் அம்மா – அன்ரி உன் வாழ்வலைகள் மறையவில்லை! மறையாமல் இருப்பதனால் நம் மனச்சுமைகள் குறையவில்லை! தினம் மண்டியிட்டு வேண்டுகின்றோம். மாண்புடன் நீ வாழ வென ஜீவியத்தில் நேசித்தவர்களை மரணத்திலும் மறவாதீர்கள்! அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 20- 07- 1989 காலை 6 மணிக்குச் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படும். பிற்பகல் 3 மணிக்கு எமது இல்லத்தில் செப வழிபாடும் நடைபெறும்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவர், மகள், மகன், தந்தை, சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறுமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

உஷா
170, [illegible] வீதி,
சில்லாலை.

(1305)

---

## வேண்டுகோள்

எமது வைத்தியசாலை ஊழியரின் மோட்டார் சைக்கிள் (Honda C 90, 97 ஸ்ரீ 1878) இரு இளைஞர் களால் இரவலாக 15 – 07 – 89 சனிக்கிழமை 10-30 மணி அளவில் எடுத்துச் செல்லப்பட்டது. இன்னமும் உறுதி அளித்தபடி திருப்பித் தரப்படவில்லை. தயவு செய்து விபரம் தெரிந்தவர்கள் இந்த வாகனத்தை மீளப் பெற உதவும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீ சாயிராம் வைத்தியசாலை,
410, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3068)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு: 1931 - 06 - 15

உதிர்வு: 1989 - 06 - 21

### திருமதி விக்னேஸ்வரி செல்லத்துரை

21 – 6 – 89 அன்று அமரத்துவம் அடைந்த எமது குல தெய்வம் விக்னேஸ்வரி செல்லத்துரை அவர்களின் ஆத்மாசாந்தி அடையபிரார்த்திக்கின்றோம். 20-07-89ல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 21-07-89ல் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் கலந்துகொள்ளு மாறு உற்றார், உறவினர்களை பணிவுடன் அழைக்கின் றோம்,

இங்ஙனம்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கைதடி வடக்கு,
கைதடி.

(1225)

---

## 91ஆம் நாளின் இதய அஞ்சலியும் 21-7-89 அந்தியேட்டிக் கிரியையும்



### கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(இரத்தினசிங்கம்)

அன்னை மடியில்: 10 - 6 - 1929
ஆண்டவன் அடியில்: 21 - 4 - 1989

மாதகன்ற மண்ணில் பிறந்து
இன்பருட்டி மகளை மணந்து
மயிலிட்டியில் இல்லறம் நடத்திய
எம் அன்புத் தெய்வமே ஐயா!
எட்டுச் செல்வங்களை ஈன்றெடுத்தும்
ஓர் அன்னையை இழந்த
ஆறாத்துயரில் இருந்த எம்மை
ஐயா என்று அலறவைத்ததென்ன?
எம்மை விட்டுப் பிரிய மனம்வந்ததென்ன?
ஐயாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

12 ஆம் வட்டாரம்,
பலாலி,
வயாவிளான்.

மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(12 16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளுக்கு

## உதவி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு - 1989

1. 1: விண்ணப்பிக்கும் மாவட்டம்: ..............................
1. 2. விண்ணப்பிக்கும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு: ..............................
1. 3: வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 3. 2க்கமைய விசேட பாடம்: ..............................

2. 1. பெயர் முதலெழுத்துக்களுடன்: ..............................

2. 2: தேசிய அடையாள அட்டை இல: ..............................
2. 2: முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்: ..............................
2. 3: பால்: ..............................
2. 4: நிரந்தர முகவரி: ..............................
2. 5: வயது விபரம்:-
1. பிறந்த திகதி: வருடம்: ............ மாதம்: ............ நாள்: ............
2. 1989 - 08 - 08 அன்று வயது; ............ வரு: ............ மாதங்கள் ............ நாட்கள் ............

2. 6. நிரந்தர வதிவிடம் பற்றிய விபரங்கள்:

| | பெயர் | வருடம் மாதம் |
|---|---|---|
| 2. 6. 1. மாவட்டம் | .............. | .............. |
| 2. 6. 2. உ. அ. அதிபர் பிரிவு: | .............. | .............. |
| 2. 6. 3. கிராமசேவகர் பிரிவு: | .............. | .............. |

3. 1. கல்வி மொழி மூலம்: ..............................
3. 2. ஆகக்கூடிய கல்வி தொழில் முறைக்குரியதும், வேறும் தகைமைகளும்:
குறிப்பு: வர்த்தமானிப் பிரசுரத்தின் பகுதி 3ற் கமைய விண்ணப்பதாரி தமது அனுபவத்தையும் சித்தியடைந்த பாடங்களையும் காட்டுதல்வேண்டும். புள்ளிகள் இடுவதற்காக நீர் உமது தகைமைகளை அத்தாட்சிப்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுவதால் விபரமாகத் தரவும். மேலும் பிரசுரத்தின் பகுதி 6இல் விளக்கப்பட்டுள்ள ஒழுங்கின்படி உமது தகைமைகளைக் காட்டுதல் வேண்டும்.

| வர்த்தமானி அறிவித்தலில் தொடர்பான பந்தி | பாடங்கள் யாப்பு/ | பரீட்சையின் பெயர்/ ஸ்தாபனம் | சித்தியெய்திய பாடங்கள் | வருடம்/ திகதி | சுட்டிலக்கம் | குறிப்பு | பெறக்கூடிய புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|

தேவையேற்படின் இவ்விபரங்களை வேறொரு தாளில் எழுதி இணைக்கவும்.
மொத்தப்புள்ளிகள்:-

3. 2. 1. சனசக்தி/உணவு முத்திரை தொடர்புகளைக் காட்டவும்:- (இது தொடர்பாக நீர் பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள் கடிதங்கள் பற்றிய விபரங்கள் தரவும்)
3. 2. 2. நீர் தொண்டர்ஆசிரியர் ஆயின் விபரம் தருக:
(அ) சேவை செய்த பாடசாலை:
(ஆ) சேவை செய்த காலம்:
(இ) வேறு விபரம்:
குறிப்பு: நீர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரைக்கும் உண்மையானவையும் சரியானவையும் எனவும் எப்பொழுதாவது கேட்கப்படும் போது சான்றுகள் சமர்ப்பிப்பேன் எனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் நான் அரசாங்க சேவையில் இருந்து விலக்கப்படவோ அல்லது திறமையின்மை காரணமாக கட்டாயஓய்வில் செல்லவோ அல்லது வேலையில் இருந்து நீக்கியவர் இல்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பிழையானவை என கண்டுபிடிக்கப்படின் நான் தகைமை அற்றவன் ஆக்கப்படுவேன் என்பதையும் நியமனத்தின் பின்னர் பிழைகள் காணப்படின் பதவி நீக்க நிலைக்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். தெரிவு செய்யப்படின் நான் இந்த நியமனத்தை வர்த்தமானி அறிவித்தலுக்குட்பட்ட நிபந்தனையின் கீழ் ஏற்றுக்கொள்வேன்.

திகதி: ..................

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## மாவட்ட ஆசிரியர்கள் சேவைத் திட்டத்தின் கீழ்

# சிங்கள-தமிழ்மொழி மூல

# உதவி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு 1989

சிங்கள தமிழ் மொழி மூல பாடசாலை உதவி ஆசிரியர்கள் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பிற்குக் கீழே விபரிக்கப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இவ் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட உப அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள பாடசாலையில் சேவை செய்வர்.

**1.0 சேவை நிபந்தனைகள்:**

1-1 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சி ஆசிரியர்களாக மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவார்கள்.
1-2 அந்தந்த உப அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு நியமனங்கள் செய்யப்படும்.
1-3 இத் திட்டத்தின் கீழ் நியமனம் பெறும் பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் பெற்ற பாடசாலையில் இருந்து மாற்றம் பெறுவதற்கு உரிமையற்றவர்களாவர்.
1-4 பகுதி 8 இல் விபரிக்கப்பட்டுள்ளது போன்ற தேவைப்படும் அந்தப் பரீட்சையில் இவர்கள் நான்கு வருட காலத்திற்குள் சித்தியடைதல் வேண்டும். வெற்றிடங்கள் தோன்றும் போது அவர்களின் சேவைப் பதிவுகள் திருப்தியானதாகவும் அதுவரை காலத்திற்குள் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தி அடைந்துமிருப்பின் அவர்கள் அந்த குறிப்பிட்ட பாடசாலையின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர்கோப்பிற்கு உள்ளெடுக்கப்படுவர்.
1-5 பயிற்சி ஆசிரியர்களுக்கு சகலதும் உட்பட படியாக மாதமொன்றிற்கு ரூபா 1000/- வழங்கப்படும்
1-6 ஸ்ரீ லங்கா சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அரசாங்க சேவை நியமனம் பெறுவோருக்காக பொது நிபந்தனைகளின் ஆரம்பத்தில் உள்ள பகுதி I தொகுதி (11 அ) க்கும் விண்ணப்பதாரிகளின் கவனம் வேண்டப்படுகின்றது.

**2-0 பொதுத் தகவுத் திறன்:-**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

2-1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
2-2 சிறந்த குணநலமும், உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
2-3 1989 ஆவணி 8 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**3-0 கல்வித் தகைமைகள்:-**

3-1 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தியடைந்தவராக விண்ணப்பதாரி இருத்தல் வேண்டும்.
3-2 குறிப்பிட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள வெற்றிடங்களின் அடிப்படையில் இவ்வகுதி நியமனங்கள் செய்யப்படுவதால், ஆணோ/பெண்ணோ கேட்கப்படும் ஆகக் கூடிய தகைமைகளைக் கொண்டிராத போதிலும் [illegible] திறனும் தெரிவும் ஒருவரின் நிரந்தர வதிவிடம் வெற்றிடமுள்ள உதவி அர-

சாங்க அதிபர் பிரிவில் உள்ளது என்பதிலே தங்கியுள்ளது.

பாடசாலை சூழவுள்ள பகுதியில் பொருத்தமான விண்ணப்பதாரி இல்லாத பட்சத்தில் அந்த கிராம சேவகர் பகுதியிலும், அப்பகுதியிலும் இல்லையெனில் அந்த உப அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தெரிவு நடைபெறும்.

எனினும் இவ்வனுமதி உப அரசாங்க அதிபர் பிரிவிற்குமேல் வழங்கப்படமாட்டாது. அதே போன்று கஷ்டப் பிரதேசங்கள், கிராமப் பகுதிகள், பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படும் போது அப் பகுதிகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் கல்விப் பொதுத் தராதர (உயர்தர) தகைமையைக் கொண்டிராத போதிலும் அமைச்சின் கொள்கைப் படி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிரந்தர வதிவிடமுடையவராகவும் கல்விப் பொதுத்தராத (சாதாரணம்) தகைமையுடையவாரகவும் இருப்பின் அவரது விண்ணப்பம் கவனத்திற்கு எடுக் ப்படும். இக் கொள்கையானது ஆசிரியர் பற்றுக் குறைவுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கும் பின்பற்றப்படும். இச் சலுகையானது கீழே கொடுக்கப்பட்டுள்ள விசேட பாடங்களில் அங்கிகாரம் பெற்ற உயர்தர தகைமைகளைக் கொண்டிருப்பவருக்கே பிரயோகப்படுத்த முடியும்.

**விசேட பாடங்கள்.**

(அ) சமய ஒழுக்கம் - அதாவது பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்துவத்தின் ஒழுக்கத் தத்துவமும் சட்டக் கோவையும்.
(ஆ) உடற்பயிற்சியும் விளையாட்டும்.
(இ) மொழிகள் - சிங்களம், தமிழ், ஆங்கிலம்.
(ஈ) நுண்கலையும் விஞ்ஞானம் / கணிதம் / தொழில் நுட்ப பாடங்கள்.

**4-0 வதிவிடம்.**

விண்ணப்பதாரி சம்பந்தப்பட்ட உப அரசாங்க அதிபர் பிரிவில் / குறிக்கப்பட்ட பாடசாலைப் பகுதியில் அவரது நிரந்தர வதிவிடத்தை நிரூபித்தல் வேண்டும்.
நிரந்தர வதிவிடம் விசேடமாகக் கருதப்படுவதனால், குறிப்பிட்ட பகுதியில் 3 அல்லது அதற்கு மேலான வருடங்கள் வசித்ததென்பதற்கு விண்ணப்பதாரிகள் உத்தியோக பூர்வ ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**5-0 தெரிவு செய்யப்படும் முறைமை.**

குறிப்பிட்ட உப அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலையில் காணப்படும் பாட வெற்றிடங்களுக்கு அமைவாக விண்ணப்பதாரியினால் கொடுக்கப்படும் ஆகக் கூடிய தகைமைகளின் அடிப்படையில் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படுவர்.

**7-0 தெரிவு செய்யும் அடிப்படை முறைமை.**

7-1 அந்தந்த உப அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அமைவாக நடாத்தப்படும் பரீட்சையின் அடிப்படையில் பொருத்தமான விண்ணப்பதாரிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.
7-2 பயிற்சி ஆசிரியர்கள் தெரிவில் பின்வருபவர்கள் விசேடமாகக் கருதப்படுவார்கள்.
(அ) சனசக்தி நன்மைகளும், உணவு முத்திரைகளும் பெறுகின்ற குடும்பங்களின் அங்கத்தவர்கள்.
(ஆ) ஆசிரியர்கள் பற்றுக்குறைவாகக் காணப்படும் பாடசாலைகளுக்கு அண்மையில் வசிப்பவர்கள்.
(இ) அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனங்களினால் நடாத்தப்பட்ட பரீட்சையின் சான்றிதழை உடையவர்கள்.
உ-ம் ஞாயிற்றுக் கிழமை பாடசாலைச் சான்றிதழ். (பௌத்தம்)
(ஈ) ஆகக் குறைந்தது ஓர் ஆண்டு கால தொண்டர் ஆசிரியர் சேவையுடைய விண்ணப்பதாரிகள்.
7-3 குறிப்பிட்ட பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு, தேர்வுக் குழுவினால் செய்யப்படும் விதப்புரையின் அடிப்படையில் சிறப்புத்திறமைக்கு அமைவாக நியமனங்கள் வழங்கப்படும். எனினும் அவ்வாறு நியமனம் வழங்க உத்தேசிக்கப்பட்டவர்களுக்கு / வழங்கப்பட்டவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளை மாகாண மீள் பரிசிலனைக் குழு கண்டு பிடிக்கும் பட்சத்தில் அவை மீள் பரிசோதனைக்குட்படுத்தப்படும்.
7-4 அரசாங்க சேவைக் குழுவிற்கான கல்விச் சேவைக் குழுவின் தீர்மானமே இது பற்றிய இறுதி முடிவாகும்.

**9 0 விண்ணப்பிக்கும் முறைமை,**

9-1 கட்டாயமாக இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் போன்று 8½'' X 11½'' அளவான தாளில் விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்டு இரண்டு பக்கங்களும் பாவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9-2 விண்ணப்பதாரிகள் உப-அரசாங்க அதிபர் பிரிவினையும் அது சம்பந்தப்பட்ட மாவட்டத்தினையும் காட்டுதல் வேண்டும்.
9-3 பாடசாலை வெற்றிட விபரங்களை உப-அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் பார்வையிடவும்.
9-4 சான்றிதழ்களையோ அவற்றின் பிரதிகளையோ விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது
9-5 விண்ணப்பத்தைக் கொண்டிருக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''உதவி ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு 1989 .............................. (உ. அ. அ. பிரிவு) .............. (மாவட்டம்)'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
9-6 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 1989 ஆவணி 8 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ பதிவுத் தபாலில் விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடம் அடங்கியுள்ள மாவட்ட கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
9-7 மாதிரி விண்ணப்பப் படிவங்கள் போன்று இல்லாத விண்ணப்பங்களும் கேட்கப்படும் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பதாரியின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
9-8 தனிப்பட்ட ஓர் அலுவலருக்கு விலாசமிட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
9-9 எவ்விதமான ஆதரவும் தேடுதல் அனுமதிக்கப்படமாட்டாது.
([illegible] விபரங்களை [illegible]மான பகுதி 6 உம் பயிற்சி முறைமை பற்றிய பகுதி 8 உம் நாளைய உதயனில் வெளிவரும்.)

# பர்மாவில் மனித உரிமை மீறல்கள்; மன்னிப்புச் சபை கண்டனம்!

லண்டன், ஜூலை 19

கிளர்ச்சியில் ஈடுபடும் மாணவர் மீது நடவடிக்கை எடுப்பதில் நிதானத்தைக் கடைப்பிடிக்கும்படி சர்வதேச மன்னிப்புச்சபை பர்மா அரசைக் கோரியுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் பதவிக்கு வந்த இராணுவ அரசு, அதற்கு முன்னர் நடந்த மாணவர் - பொது மக்கள் கிளர்ச்சியில் இராணுவத்தினரால் மாணவர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து மிகவும் அக்கறையுடன் விசாரணைகளை நடத்தவில்லை.

இக்கொலைகளில் ஈடுபட்ட இராணுவ வீரர் எவராவது இன்னும் தண்டிக்கப்படவில்லை.

மனித உரிமை மீறல்களில் இன்னமும் இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் மனசாட்சியின் கைதிகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அமைதியின்மையைக் கட்டுப்படுத்த யுத்தக்கள விதிகளைக்கூட அமுல் நடத்தத் தயங்கமாட்டோம் என்று பர்மா அரசு அறிவித்திருப்பது கவலையைத் தருகிறது—

இப்படிச் சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[எ]

## தென்கொரியாவில்

# படை குறைப்பு இல்லைஎன்று அமெரிக்கா அறிவிப்பு!

தென்கொரியாவில் உள்ள அமெரிக்கத் துருப்புக்களின் பலம் குறைக்கப்படமாட்டாது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் முன்கண்ட தகவலை டெலிவிஷன் பேட்டி ஒன்றில் வெளியிட்டார்.

மேற்கு ஐரோப்பாவில் இருந்து துருப்புக்களை குறைக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

இது சோவியத் யூனியனின் படைக் குறைப்பைப் பொறுத்தே தங்கியுள்ளது.

இப்படி திரு: பேக்கர் சொன்னார். (எ)

## ஊழல் விசாரணை

ஏதென்ஸ், ஜூலை 19

கிரீஸ் நாட்டின் முன்னாள் பிரதமர் திரு: பாப்பந்திரியோ மீது ஊழல் விசாரணை நடத்த கிரேக்க நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. (எ)

## பசுபிக் கடல் மட்டம் உயரும்

மாஜுரோ (மார்ஷல் தீவுகள்): ஜூலை 19

அடுத்த 50 ஆண்டுகளில் பசுபிக் சமுத்திரத்தில் நீர் மட்டம் மேலும் 1. 3 அடியால் உயரும் ஆபத்து உண்டு.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அமைச்சு ஒன்று இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. (எ)

## அமைச்சர் மீது 'வாரண்ட்'

கரகாஸ், ஜூலை 19

ஆர்ஜென்டீனாவின் புதிய பொருளாதார அமைச்சர் மீது வெனிசுலா நீதிமன்றம் கைது செய்யும் வாரண்ட் ஒன்றைப் பிறப்பித்திருக்கிறது.

மோசடி வழக்கு ஒன்று தொடர்பாக இந்த வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

அமைச்சர் நிரபராதி என்று ஆர்ஜென்டீனா ஜனாதிபதி அறிவித்திருக்கிறார். (எ)

## வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு சீனாவில் தடை

பீகிங், ஜூலை 19

வெளிநாட்டுப் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை சீனாவில் விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அப்படி விற்பனை செய்யப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் சீன அரசு அறிவித்துள்ளது.

இதனிடையில் — வோய்ஸ் ஒப் அமெரிக்காவின் சீன மொழியிலான ஒலிபரப்பை சீன அதிகாரிகள் குழப்பி வருகின்றனர். (எ)

## விண்ணப்பம் நிராகரிப்பு

புதுடில்லி, ஜூலை 19

போபேர்ஸ் பேர ஊழல் தொடர்பாக பிரதமர் ராஜீவ் காந்தி மீது வழக்குத்தொடர அனுமதி கோரி பிரபல வழக்கறிஞர் சாந்திபூஷண் சமர்ப்பித்த விண்ணப்பத்தை இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் நிராகரித்து விட்டார்.

நிராகரிப்புக்குக் காரணம் எதையும் ஜனாதிபதி வெளியிடவில்லை. (எ)

## மண்டேலாவின் பிறந்ததினம்

கேப்டவுண், ஜூலை 19

தென் ஆபிரிக்கா தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா இன்று 71 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார்.

சிறையில் கொண்டாடும் கடைசிப் பிறந்ததினமாக இது இருக்கும் என்றும் தெரிகிறது.

26 ஆண்டுகளாக சிறைவைக்கப்பட்டிருக்கும் இவர் வருகிற செப்டம்பரின் பின் விடுதலை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

## கடத்தல்

ஹைதராபாத் ஜூலை 19

ஆந்திரா மாநிலத்தில் மக்கள் கமிட்டித் தலைவர் ஒருவரை நக்ஸலைட் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர்.

ராஜிரெட்டியை அவரது இல்லத்தில் இருந்து 8 நக்ஸலைட்டுக்கள் கடத்திச் சென்றனர்.

இவரை விடுவிக்க ஆந்திர மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (எ)

## லோகசபையில் இலங்கை விவகாரம்

புதுடில்லி, ஜூலை 19

இந்திய லோகசபையின் மழைக்காலக்கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கையில் அமைதிப் படை, நேபாளம் ஆகிய பிரச்சினைகளை இத்தொடரின் போது எழுப்புவது என்று எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தீர்மானித்து உள்ளன.

(இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**வி. ரி. அன் சன்ஸ்**
✶ பல் கட்டுபவரும்
✶ கண் பரிசோதித்துக் கண்ணுடி கொடுப்பவரும்
302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
(B.M.C க்கு முன்பாக)
முகாமையாளர்
**Dr. றெஜி சொலமன்**

# உதயன்

20 - 07 - 1989 வியாழக்கிழமை

**வி. ரி. அன் சன்ஸ்**
✶ பல் கட்டுபவரும்
✶ கண் பரிசோதித்துக் கண்ணுடி கொடுப்பவரும்
302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C க்கு முன்பாக)
முகாமையாளர்
**Dr. றெஜி சொலமன்**

## ஈ.என்.டி.எல்.எவ். அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 20 புளொட் இயக்கத்தின் செயலதிபர் திரு. உமாமகேஸ்வரன் கொழும்பில் வைத்து கொலை செய்யப்பட்டதை கண்டித்தும், அவரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தியும் ஈ. என். டி. எல். எவ்.வின் சார்பில் அதன் யாழ். மாவட்ட செயலர் திரு. எம். பாபுஜி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

தமிழ் மக்களதும், தலைவர்களதும் உயிருக்கும் உடைமைக்கும் கொழும்பு ஆட்சி எந்தக் காலத்திலும் பாதுகாப்பு வழங்க முடியாது என்பதனை திரு. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் மற்றும் உமாமகேஸ்வரனது படுகொலைகள் நிரூபிக்கின்றன.

ஜனாதிபதி பிரேமதாஸா தனக்கு வேண்டாதவர்களையும் முரணானவர்களையும் தீர்த்துக்கட்டுவதில் ஒரு குழுவைப் பயன்படுத்துகிறார்.

எனவே தமிழ் மக்கள் கொழும்பு செல்வதையோ அல்லது அங்கு குடியமர்வதையோ தவிர்த்துக் கொள்ளவேண்டுமென ஈ.என். டி. எல். எவ் கேருகிறது. (உ)

## உமா கொலைச் சம்பவம்; ரெலோவும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 20 புளொட் இயக்கத்தின் செயலதிபர் படுகொலை செய்யப்பட்டது தமக்கு அதிர்ச்சியளித்திருப்பதாகத் தெரிவித்து ரெலோ இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலைகள் தந்த அதிர்ச்சியிலிருந்து கொஞ்சங்கூட நாம் விடுபடுவதற்கு முன்னர் இந்த சோகச் செய்தி வந்துள்ளது.

அடிப்படை மனித உணர்வுகள்கூட எமது இனத்தில் மரத்துப்போய்விட்டனவா என்றே கேட்கவேண்டிய நிலையில் நாமனைவரும் உள்ளோம்.

இனப்பற்றும் செயற்திறனும்கொண்டு விடுதலைப் போராட்டத்தில் நீண்ட காலமாக ஈடுபட்டு உழைத்த ஒரு சகோதரனை நாம் இழந்துவிட்டோம்.

-என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## வடபகுதித் தபால்கள் வவுனியாவுக்கு வந்தன

வவுனியா, ஜூலை 20

அனுராதபுரத்திற்கு ரயில் மூலம் எடுத்துவரப்பட்ட வடபகுதிக்கான தபால்கள் வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

வவுனியாவில் தேங்கிக் கிடந்த கொழும்புத் தபால்கள் 400 பொதிகள் கடந்த திங்கட்கிழமை அனுராதபுரத்துக்கு விசேட பஸ்மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

அந்த பஸ்ஸிலேயே வடபகுதிக்கான தபால்கள் கொண்டு வரப்பட்டன.

இவற்றில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களுக்குரிய தபால் பொதிகளை நேற்று அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அதேசமயம் வவுனியாவுக்குரிய தபால்களை நேற்று விநியோகிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இத்தகவல்களை வவுனியா பிரதம அஞ்சல் அதிபர் திரு. எவ். பொன்னையா உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-164)

## வீடுகளில் 'சென்றி'கள்!

வல்வெட்டித்துறை, ஜூலை 20

வியாபாரிமூலையில் உள்ள சில வீடுகளில் 'சென்றி'கள் அமைக்கப்பட்டுள்ளன.

முகாமை அண்டிய பகுதிகளிலுள்ள அசம்பாவிதங்களின் போது வெளியேறியோரின் வீடுகளிலேயே 'சென்றி'கள் போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-160)

### 90ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. முத்தையா செல்லையா**

அவனியில்: 11 - 05 - 1936
அவனடியில்: 20 - 04 - 1989

ஓ அன்பான அப்பா!
அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும்
எம்மை வளர்த்தெடுத்தீர்!
கல்வி எனும் அழியா செல்வம் தந்து
எம்மை ஆளாக்கினீர்
தஞ்சமென நாம் வாழ்ந்த காலை
எம்மை தன்னந்தனியே தவிக்க விட்டு
எங்கு சென்றீர்!

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் ஆறாத்துயரடையும்
மனைவி, பிள்ளைகள்.

[சி-2912]

உமாமகேஸ்வரன் கொல்லப்படுவதற்கு முன்னர்:

# புதுடில்லியில் புளொட் பேச்சு!

## இந்தியப் பத்திரிகை தகவல்

புதுடில்லி ஜூலை 20 இந்திய அரசுடன் புளொட் இயக்கத்திற்கு இணக்கம் ஏற்படவிருந்தவேளையில் அதன் செயலதிபர் திரு. உமாமகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புதுடில்லியில் இருந்துவெளிவரும் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அண்மையில் புளொட்டின் அரசியல் தலைவர் திரு. சித்தார்த்தன் புதுடில்லி சென்று இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச்செயலாளர் திரு. குல்தீப் சகாதேவுடன் திரு. சித்தார்த்தன் பேச்சுக்கள் நடத்தினார்.

அப்பேச்சுக்களின்போது 'றோ'வின் உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர் என்று புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன.

சித்தார்த்தனின் புதுடில்லித் தொடர்பு இரண்டு கட்டங்களைக் கொண்டது.

ஒன்று, மாலைதீவில் தோல்வியில் முடியடைந்த சதி முயற்சியின்போது கைதானவர்களை விடுவிப்பது.

ஆனால் புதுடில்லியில் புளொட்டின் பிரதிநிதியினால் தங்களுடைய ஒத்துழைப்பு பற்றி இந்திய அரசை உடனடியாக வசப்படுத்த முடியவில்லை.

அவர் பொறுத்து இருந்து பார்ப்பதற்காக சென்னை திரும்பினார்.

கூட்டணித் தலைவர்களின் மரணம் இது தொடர்பான விடயங்களை மேலும் தாமதப்படுத்தியது.

மாலைதீவில் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் புளொட் இயக்க தீவிரவாதிகள் 50 பேர் பற்றிய முடிவு எடுப்பதற்கு முன், சிறிது பொறுத்து இருக்கும்படி இந்தியா திரு. சித்தார்த்தனை கேட்டுக் கொண்டது.

மாலைதீவில் காவலில் வைக்கப்பட்டுள்ள 50பேர் தொடர்பாக தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை.

இவர்களில் நான்குபேர் எப்படியோ மாலைதீவில் இருந்து தப்பி மீன்பிடிப்படகு ஒன்றில் இலங்கை வந்து சேர்ந்து விட்டனர்.

தவறுதலாக தங்கள் கண்காணிப்பில் இருந்து இந்தியப் படைகள் இவர்களை வெளியேற விட்டுவிட்டனர்.

—இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## தாய்ப்பாலுக்கு நிகரான பாலைத் தரக்கூடிய பசு!

அம்ஸ்டர்டாம், ஜூலை 20 நூற்றுக்கு நூறு தாய்ப்பாலுக்கு நிகரான பாலைத் தரக்கூடிய பசு இனம் ஒன்றை செயற்கை முறையில் கண்டுபிடிக்கும் முயற்சியில் டச்சு 'ஜெனடிக்' நிறுவனம் ஈடுபட்டிருக்கின்றது.

தாய்ப்பாலுக்கு நிகரானது வேறு ஒன்றும் இல்லை என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

நோயில் இருந்து குழந்தையை தானாகத் தடுக்கும் சக்தி தாய்ப்பாலில் இருக்கிறது.

தற்போது நடைபெறும் ஆராய்ச்சி வெற்றி அளிப்பின் முதன் முறையாக, தாய்ப்பாலை ஒத்த பாலைத் தரக்கூடிய ரகப் பசுக்கள் 1992இல் நம் மத்தியில் நடமாடத் தொடங்கிவிடும் — என்று 'ஜெனடிக்' நிறுவன முகாமையாளர் ஒட்டோ பொஸ்ட்மா தெரிவித்தார்.

## இந்திய நாடாளுமன்றில் நேற்று எம்.பிக்கள் கூச்சல்!

புதுடில்லி, ஜூலை 20 போபேர்ஸ் பேர ஊழல் தொடர்பாக பிரதமர் ராஜீவ் காந்தி பதவி விலக வேண்டும் என்று கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்றத்தில் கூச்சல் இட்டனர்.

திரு. ராஜீவ் காந்தி பதவி விலகும் வரை கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தவிடப் போவதில்லை என்று எதிர்க்கட்சியினர் கூறினர்.

இதைத் தொடர்ந்து நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-எ)

## இந்தியாவுக்கு பிரேமா கட்டளையிடக்கூடாது!

### சஞ்சீவரெட்டி கூறுகிறார்

ஹைதராபாத், ஜூலை 20 அமைதிப்படையை விலக்குவது பற்றி இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுக்கள் நடத்த வேண்டுமே தவிர இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று திரு. பிரேமதாசா கட்டளையிடக் கூடாது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி ஹைதராபாத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறுதெரிவித்தார்.

அமைதிப்படையினர் அங்கு இருப்பதால் தான் இலங்கை பாதுகாப்பாக இருக்கிறது.

என்றும் திரு. சஞ்சீவரெட்டி சொன்னார். (உ-எ)

தங்கம் கடத்த முயன்ற

## ஜப்பானிய நாட்டவருக்கு 72 லட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, ஜூலை 20 தங்கம் கடத்த முயன்ற ஜப்பானிய பிரசை ஒருவருக்கு கொழும்பு சுங்கத் திணைக்களம் நேற்று 72 லட்சம்ரூபா அபராதம் விதித்தது.

கட்டுநாயக்கா வந்திறங்கிய இவரிடமிருந்த 20 தோலா தங்கத்தை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

வானொலி ட்ரான்ஸ்போமரினுள் தங்கம் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது.

தண்டப் பணத்தைச் செலுத்தாமற் போகவே அவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (உ-எ)

## வெள்ளத்தினால் இவ்வாண்டு 342 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 20 இலங்கையில் இந்த ஆண்டு இதுவரை வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 342 என்று அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் குழந்தைகள் குறைந்தது நூறுபேராவது இருக்காலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, காலி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் கடந்த மே, ஜூன் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 325 என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## செம்மலை, அளம்பில் மக்கள் முல்லைக்கு இடம்பெயர்வு

முல்லைத்தீவு, ஜூலை 20 செம்மலை, அளம்பில் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முல்லைத்தீவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை செம்மலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளை அடுத்தே மக்கள் இடம் பெயரத் தொடங்கினர்.

செம்மலை ப. நோ. கூ. சங்கக்கடை குண்டுவீசித் தகர்க்கப்பட்டது என்றும் வீடுகள் பல எரிக்கப்பட்டன என்றும் சொல்லப்படுகிறது.

இதேவேளை நேற்று அதிகாலை 2 மணிமுதல் 7 மணி வரை தண்ணீரூற்று, வற்றாப்பளை, கேப்பாபிலவு ஆகிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. [ஒ-92]

## இலங்கை தூதுவருடன் ராஜீவ் பேச்சு!

புதுடில்லி, ஜூலை 20 இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் திரு. ஸ்டான்லி கல்பகே நேற்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைப் புதுடில்லியில் சந்தித்துப் பேசினார். (உ)

## சடலத்தை அடையாளம் காண உதவுங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20 யாழ். ஆஸ்பத்திரியில் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இளம்பெண்ணின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பெண் கடந்த 17 ஆம் திகதி யாழ் மாட்டீன் வீதி, வேம்படிச்சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (ஒ-9)

**உமா...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தது.

புளொட் அலுவலகத்தில் சடலம் வைக்கப்பட்டு பின்னர் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

**ரஞ்சன்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது.

திரு. விஜேரத்தின பேச்சுக்கள் நடத்த புதுடில்லி வருவாரானால் அவர் வரவேற்கப்படுவார் என்று புதுடில்லியில் வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

''இலங்கை விதித்துள்ள காலக்கெடுவுக்கு முன் அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறுவிட்டால், பலவந்தமாக வெளியேற்றப்படும் என்று கூறியதை திரு. விஜேரத்தின இதுவரை மறுக்கவில்லை. இந்த நிலையிலும் அவர் வரவேற்கப்படுவாரா?'' —என்ற கேள்விக்கு அப் பேச்சாளர்—

''பேச்சுக்கள் நடத்த இந்தியா என்றுமே தயாராக உள்ளது'' —என்று சொன்னார்.

''அமைதிப்படை விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த புதுடில்லிக்குப் போகமாட்டேன்—

விருப்பமானால் இந்தியா தனது பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பட்டும்'' என்று வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின முன்னர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி P. F. R. அந்தோனிப்பிள்ளை

(ஆசிரியை மாதகல் யா/புனித தோமையார் வித்தியாலயம்)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி P. F. R. அந்தோனிப்பிள்ளை (ராணி) 18 - 07 - 89 அன்று அகால மரணமானார்.

அடக்கச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பிரதான வீதி,
மாதகல்.

தகவல்:
லூக் ஆரோக்கியசாமி

(11579)

### நடராசா வசந்தகுமார்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா வசந்தகுமார் நோர்வேயில் அகால மரணமானார். அன்னார் நடராசா - லோகசுந்தரியின் அன்புப் புதல்வரும், வசந்தமலர், வசந்தகலா, ஜீவகுமார், ரதீஸ்குமார், ஜெயானந்தகுமார், சிவதருசினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

1 ஆம் வட்டாரம்,
சந்தையடி.
புங்குடுதீவு.

தகவல்
ஏ. குணரட்னம்

(1224)

### சிவப்பிரகாசம் வைகுந்தவாசன்

புலோப்பளை - பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவப்பிரகாசம் வைகுந்தவாசன் (பவுண், வாசன்) 17-07-1989 இல் அகாலமரணம் அடைந்துவிட்டார்.

இவர் சிவப்பிரகாசம் பரமேஸ்வரியின் அன்பு மகனும், கௌசல்யா, பிரதீபன், பிறேமினி, சுலஷ்சனா, நிலானி ஆகியோரின் அன்பு அண்ணனும், யோகராசா, திருமேனி, தவபூமணி, ரூபசுகந்தினி, பவானி ஆகியோரின் பெருமகனும், தெய்வேந்திரன்(சாரதி), சந்திரகுமாரன், உதயகுமாரன் (ஆசிரியர், முழங்காவில் ம. வி.), விஜயரட்டினம், சரஸ்வதி, மஞ்சுளாதேவி ஆகியோரின் மருமகனும், கிருஷ்ணபிள்ளை (சுவாமியார்), தெய்வானை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னச்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 18-07-1989 இல் நடைபெற்றது. இதை நண்பர்கள், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

புலோப்பளை மேற்கு.
பளை.

தகவல்:
க. சந்திரகுமாரன்

(1234)

### தம்பையா கணேசபிள்ளை

காரைநகர் பலகாட்டைச் சேர்ந்த தம்பையா கணேசபிள்ளை காலமானார்.

இவர் முன்னாள் த. சிற்றம்பலம் அன் சன்ஸ் நெல்லியடி ஸ்தாபன உரிமையாளரும், காலஞ்சென்ற சி. தம்பையா, த. வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி, லோகேஸ்வரன், லோகநாதன், லோகாஜினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சண்முகரத்தினம், சிவானந்தராசா (இ.மி.ச. சுன்னாகம்), கமலாதேவி, சரோஜினிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசலிங்கம், கதிரவேலு, அம்பலவாணர், கமலாம்பிகை, கலாஜோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-07-1989 இன்று வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11-00 மணிக்கு காரைநகர் நீலகிரி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

காரைநகர்.
(1235)

தகவல்:
த. சிவானந்தராசா
த. சண்முகரத்தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-07-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.